**தேசிய வீதி வலையமைப்பின் பிரதான பாலங்களின் நிர்மாணச் செயற்திட்டத்தின் (37 பிரதான பாலங்கள் நிர்மாணச் செயற்திட்டம்) - 2014**

---

தேசிய வீதி வலையமைப்பின் பிரதான பாலங்களின் நிர்மாணச் செயற்திட்டத்தின் (37 பிரதான பாலங்கள் நிர்மாணச் செயற்திட்டம்) 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய தொடர்ந்து எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. இச் செயற்திட்டமானது ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு முகவராண்மைக்கும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கத்திற்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட 2013 மார்ச் 14 ஆந் திகதிய எஸ்எல் -பி 108 ஆம் இலக்க உடன்படிக்கையின் கீழ் அமுலாக்கப்படுகின்றது.

**1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கல், குறிக்கோள்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி**

---

செயற்திட்டத்தின் கடன் உடன்படிக்கையின் படி, முன்னாள் நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் கப்பற்துறை அமைச்சும் தற்போதைய உயர் கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சும் நிறைவேற்றல் முகவராக உள்ளதுடன் வீதி அபிவிருத்தி அதிகாரசபை செயற்திட்டத்தின் அமுலாக்கல் முகவராக உள்ளது. தேசிய வீதிகளில் பிரதான பாலங்களை நிர்மாணிப்பதன் மூலம் தேசிய வீதி வலையமைப்பை முன்னேற்றுவதும் அதன் மூலம் பொருளாதார அபிவிருத்திக்கு பங்களிப்புச் செய்வதே செயற்திட்டத்தின் நோக்கமாக உள்ளது. செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 27,249 மில்லியனுக்கு சமனான ஜ.யென் 16,132 மில்லியனானதுடன் ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு முகவராண்மை செயற்திட்டத்திற்காக ரூபா 20,913 மில்லியனிற்கு சமமான ஜ.யென் 12,381 மில்லியனை வழங்குவதற்கு உடன்பட்டது. மிகுதி ரூபா 6,336 மில்லியனை இலங்கை அரசாங்கத்தால் வழங்க வேண்டியிருந்தது. செயற்திட்டம் நடவடிக்கைகள் 2013 மார்ச் மாதத்தில் தொடங்கப்பட்டிருந்ததுடன் 2019 இல் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென பட்டியலிடப்பட்டிருந்தது.

1.3 **நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு**

---

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களிற்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

1.4 **கணக்காய்வாளரின் பொறுப்பு**

---

எனது கணக்காய்வின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்கள் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன. நிதிக்கூற்றுக்களில் உள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ்கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவுசெய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாக

சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்திற் கொள்கின்றாரேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக கருத்திற்கொள்ளவில்லை. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வுசெய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வுசெய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன். பின்வருவனவற்றை மதிப்பிடுவதற்கு அவசியமானவையாகக் காணப்பட்ட அவ்வாறான செவ்வையினையும் அப் பரிசோதனை உள்ளடக்கியுள்ளது.

(அ) செயற்திட்ட முகாமைத்துவத்தின் மீதான திருப்திகரமான கட்டுப்பாட்டையும் செயற்திட்டத்தின் செயற்பாடுகள் தொடர்பான ஏடுகள், பதிவேடுகள், முதலியவற்றின் நம்பகத்தன்மையும் நிச்சயப்படுத்துவதற்கேற்றவாறு உள்ளகக் கட்டுப்பாட்டின் நோக்கில் முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் போதியளவில் இருந்தனவா என்பதும்,

(ஆ) செயற்திட்டத்தினுடைய நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட செலவினங்கள் செயற்திட்டத்தால் பேணப்பட்ட நிதி அறிக்கைகள் மற்றும் செயன்முன்னேற்ற அறிக்கைகளுடன் திருப்திகரமாக கணக்கிணக்கம் செய்யப்பட்டிருந்தனவா என்பதும்,

(இ) இலங்கை அரசாங்கம் மற்றும் கடன்வழங்கும் முகவர் என்பவற்றின் நிதிகளிலிருந்தான செயற்திட்ட செலவினங்கள், நிதிசார் மற்றும் பௌதீக ரீதியில் செயற்திட்டத்தின் முன்னேற்றம், செயற்திட்ட தொழிற்பாடுகளிலிருந்து உருவாகிய சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள், கடன் முதலியவற்றிலிருந்து மேற்கொள்ளப்பட்ட கொள்வனவுகளை இனங்காணல் என்பவற்றைத் தொடர்ந்து செல்லும் அடிப்படையில் காட்டும் வண்ணம் போதிய கணக்கீட்டுப் பதிவேடுகள் பேணப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஈ) கடனின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பற்றுதல்கள் கடன் உடன்படிக்டிக்கைகளில் குறித்துரைக்கப்பட்ட விதப்புரைகளுக்கிணங்க இருந்தனவா என்பதும்,

(உ) கடனின் கீழ் வழங்கப்பட்ட நிதிகள், பொருட்கள் மற்றும் உபகரணங்கள் என்பன செயற்திட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டுள்ளனவா என்பதும்,

(ஊ) செயற்திட்டத்தின் அமுல்படுத்தலுக்காகக் கடைப்பிடிக்கப்பட்ட வகைப்படுத்தலுக்கிணங்க செலவினங்கள் சரியாக இனங்காணப்பட்டிருந்தனவா என்பதும்

(எ) நிதிக்கூற்றுக்களானவை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களிற்கு இணங்க தயாரிக்கப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஏ) எனது முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தனவா என்பதும், மற்றும்

(ஐ) கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிக் கட்டுப்பாடுகளுடன் இணங்கியிருந்தனவா என்பதும் ஆகும்

## 1.5 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1. அபிப்பிராயம்

எனது ஆய்வின் மூலம் தென்படுவதும் எனக்குக் கிடைக்கப்பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் எனக்கு வழங்கப்பட்ட விளக்கங்களுக்கும் அமையவும், இந்த அறிக்கையின் பந்தி 2.2 இல் குறிப்பிடப்பட்ட விடயங்களிலிருந்து எழுகின்ற சீராக்கல்களின் தாக்கங்களைத் தவிர்த்தும்,

(அ) செயற்திட்டமானது 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான முறையான கணக்கேடுகளைப் பேணியிருந்ததுடன் நிதிக்கூற்றுக்களானவை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு அமைய 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிலவரத்தை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் காட்டுகின்றனஎன்றும்,

(ஆ) வழங்கப்பட்ட நிதிகள் அவை வழங்கப்பட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும்,

(இ) எனது முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன என்றும்,

(ஈ) கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிக் கட்டுப்பாடுகளுடன் இணங்கியிருந்தன என்றும், நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள்மீதான கருத்துரைகள்

#### 2.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) செயற்திட்ட நடவடிக்கைகளுடன் தொடர்புபட்டிருக்காத நடவடிக்கைகள் தொடர்பில் ஏற்பட்ட ரூபா 101,674 ஆன தொகை செயற்திட்டத்தின் செயற்பாட்டுச் செலவினமாக சாட்டுதல் செய்யப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டின் போது வீதி அபிவிருத்தி அதிகாரசபையிடமிருந்து பெறப்பட்ட ரூபா 85 மில்லியன் பெறுமதியான விசேட கடன் இலங்கை அரசாங்கத்திடமிருந்து பெறப்பட்ட நிதியாக கணக்கிடப்பட்டிருந்தது.

(இ) வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் விசேட செயற்திட்ட பிரிவால் கையாளப்பட்ட 05 செயற்திட்டங்கள் ஏனையவற்றுடன் தொடர்புடைய ரூபா 38.80 மில்லியன் தொகையான மேந்தலைச் செலவினம் செயற்திட்டத்தின் செயற்பாட்டுச் செலவினமாக சாட்டுதல் செய்யப்பட்டிருந்தது.

(ஈ) செயற்திட்ட நடவடிக்கைகளுக்காக விடுவிக்கப்பட்ட வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் ஊழியர்களுக்காக மேற்கொள்ளப்பட்ட ரூபா 835,192 தொகையான பணிக்கொடை ஏற்பாடு, வீதி அபிவிருத்தி அதிகாரசபையில் அவர்கள் சேவை செய்த காலத்தை உள்ளடக்கி அவர்களுடைய சேவைக்கான

முழுக்காலத்துக்குமாக ஏற்பாடுகள் கணிப்பீடு செய்யப்பட்டமையால் ரூபா 303,514 ஆல் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.

**2.2.2 இணக்கம் செய்யப்படாத மீதிகள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2014 இற்கான உரிய அமைச்சின் ஒதுக்கீட்டு கணக்கின் பிரகாரம், மீளாய்வாண்டிற்கான செயற்திட்டத்தின் மொத்த மூலதனச் செலவினம் ரூபா 45.90 மில்லியனாக காட்டப்பட்டிருந்தது. எனினும், செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களில் ரூபா 46.10 மில்லியனாக காட்டப்பட்டிருந்தது.

(ஆ) 25 பாலங்கள் மீள்நிர்மாணச் செயற்திட்டம் என அழைக்கப்பட்ட வேறொரு செயற்திட்டத்திற்கு ரூபா 1.95 மில்லியன் செயற்திட்டத்தால் மாற்றப்பட்டிருந்த போதிலும் செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களில் செலுத்தவேண்டியவைகளாக எவ்வித மீதிகளும் காட்டப்பட்டிருக்கவில்லை.

**2.2.3 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பொதுத் திறைசேரியின் பொது முயற்சிகள் திணைக்களத்தால் வழங்கப்பட்ட 2003 யூன் 02 ஆந் திகதிய பிஈடி/12 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 8.3.9 ஆம் பிரிவின் அறிவுறுத்தல்களிற்கு முரணாக மேந்தலைக் கட்டணங்களாக 2014 திசெம்பர் 31 வரை வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கு ரூபா 1.52 மில்லியன் ஆன தொகை அனுப்பப்பட்டிருந்தது.

(ஆ) முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் 2007 ஏப்ரல் 07 ஆந் திகதிய 33 ஆம் இலக்க சுற்றறிக்கையில் வழங்கப்பட்ட் அறிவுறுத்தல்களிற்கு முரணாக செயற்திட்ட பதவியணிக்கு ரூபா 3.55 மில்லியன் கூட்டுமொத்தத்தொகையான ஊக்குவிப்புப்படிகள் செலுத்தப்பட்டிருந்தன.

## 3. நிதிசார் மற்றும் பௌதீக செயலாற்றல்

### 3.1. நிதிகளின் பயன்பாடு

மீளாய்வாண்டிற்கான நிதியளிப்பு, பாதீட்டு ஏற்பாடு மற்றும் மீளாய்வாண்டின் போதான மற்றும் 2014 திசெம்பர் 31 வரையான நிதிகளின் பயன்பாடு என்பன தொடர்பான முக்கியமான சில புள்ளிவிபரங்கள் கீழே தரப்படுகின்றன.

| மூலம் | கடன் உடன்படிக்கையில் நிதியளிக்க உடன்பட்ட தொகை | | மீளாய்வாண்டிற்கான பாதீட்டு மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்ட ஒதுக்கீடு | பயன்படுத்திய நிதிகள் | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | 2014 ஆம் ஆண்டின் போது | | 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | |
| | ஜ.யென் மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ஜ.யென் மில்லியன் | ரூபா மில்லியன் | ஜ.யென் மில்லியன் | ரூபா மில்லியன் |
| ஜேஐசீஏ | 12,381 | 20,913 | 227.72 | 203.61 | 221.79 | 208.53 | 227.15 |
| இலங்கை அரசாங்கம் | 3,751 | 6,336 | 45.94 | 42.32 | 46.09 | 49.26 | 53.66 |
| | 16,132 | 27,249 | 273.66 | 245.93 | 267.88 | 257.79 | 280.81 |

### 3.2 பௌதீக செயலாற்றல்

கிடைக்கப்பெற்ற தகவல்களின்படி, மீளாய்வாண்டின் போது பாலங்களின் விரிவான வடிவமைப்புக்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. 10 பாலங்களின் நிர்மாணத்திற்கான சிவில் வேலை ஒப்பந்தங்கள் 2014 திசெம்பர் 30 இலேயே கையளிக்கப்பட்டிருந்தன.

### 3.3 ஒப்பந்த நிர்வாகம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ஆலோசனை உடன்படிக்கையின் குறிப்புரை நிபந்தனையின் 3 ஆம் உட்பிரிவின் பிரகாரம், சகல அளவைகளும் விசாரணைகளும் ஆலோசனையாளரால் மேற்கொள்ளப்பட வேண்டும். எவ்வாறாயினும், அத்தகைய சில விசாரணைகள் மற்றும் அளவைகள் வெளித்தரப்பினரால் செய்யப்பட்டிருந்ததுடன் செயற்திட்டத்தினால் ரூபா 23.14 மில்லியன் செலுத்தப்பட்டிருந்தன என அவதானிக்கப்பட்டது.

(ஆ) ஆலோசனை உடன்படிக்கையின் பொது நிபந்தனையின் 6.5(இ) ஆம் உட்பிரிவின் பிரகாரம், சகல ஆலோசனைக் கொடுப்பனவுப் பட்டியல்களும் அவசியமான ஆதார ஆவணங்களுடன் வழங்கப்பட வேண்டும். அதேநேரம் வழங்கப்பட்ட ஆலோசனை சேவைகளிற்கான ஆதாரமான ஆவணங்கள் இல்லாமல் ரூபா 29.97 மில்லியன் தொகை செலுத்தப்பட்டிருந்தது.

### 3.4 மனித வளங்கள் முகாமைத்துவம்

முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் செயற்திட்ட அலுவலகத்தின் பதவியணி 62 ஆக இருக்க வேண்டுமென அங்கீகரிக்கப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டின் இறுதியில் 31 உறுப்பினர்களை உள்ளடக்கியிருந்தது. எனினும், 02 பிரதம பொறியிலாளர்கள், 07 செயற்திட்ட பொறியிலாளர்கள், 05 தொழில்நுட்ப பொறியிலாளர்கள் போன்ற பதவிக்கான 40 வெற்றிடங்கள் மீளாய்வாண்டின் இறுதியில் நிரப்பப்படாது இருந்தன. மேலும் , 01 உதவி கணக்காளர், 04 முகாமைத்துவ உதவியாளர், 03 வெளிச்ச உபகரண செயற்பாட்டாளர் உள்ளடங்களாக 09 ஊழியர்கள் வேலைக்கமர்த்தப்பட்டிருந்ததுடன் செயற்திட்டத்தால் 4.09 மில்லியன் செலுத்தப்பட்டிருந்ததுடன் அத்தகைய பதவிகள் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை.